# தர்ப்பண மஹிமை

தந்யம் யஶஸ்யம் ஆயுஷ்யம்
ஸ்வர்க்யம் ஶத்ருவிநாஶநம் ।
குல ஸந்தாரகம்சேதி
ப்ராத்தமாஹுர்மநீஷிண : ॥

பித்ருக்களை உத்தேசித்துச் செய்யப்படும் தர்ப்பணமானது தனம், கீர்த்தி, ஆயுள், ஸ்வர்க்கம் முதலிய நன்மைகளை அளிக்கும். சத்ருக்களை நீக்கும். தன் குலம் தழைத்தோங்கச் செய்யும்.

*— பாரதம் அநுசாஸந பர்வம், ஸ.* 145

॥ ஸ்ரீ : ॥



# தென்கலை அமாவாஸ்யை தர்ப்பணம்

(க்ரஹண-மாஸஸங்க்ரமண தர்ப்பணங்கள் உட்பட)

பதிப்பகத்தார்

**தி லிட்டில் ப்ளவர் கம்பெனி**

சென்னை - 600 017. திருச்சி - 620 002

**2001**

விலை ரு. 3-00

RangaRakes tamilnavarasam.com

# முன்னுரை

ஸ்ரீமந் நாராயணனுடைய க்ருபையாலும், பூர்வ ஜந்ம புண்ணியத்தை அனுசரித்தும் மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனும் முக்கடன்களைச் செலுத்தியாக வேண்டும்.

"ஜாயமாநோ வை ப்$^3$ராஹ்மண: த்ரிபி$^4$ர் ரிணவா ஜாயதே | ப்$^3$ரஹ்மசர்யேண ரிஷிப்$^4$ய: | யஜ்ஞேந தே$^3$வேப்$^4$ய: | ப்ரஜயா பித்ருப்$^4$ய: |"

—என்று வேதம் கூறுகிறது.

முக்கடன்கள்: (1) தேவருணம், (2) ரிஷிருணம், (3) பித்ருருணம் என்பவை ஆகும்.

**தேவ ருணத்தை** ஜ்யோதிஷ்டோமம், அக்நிஹோத்ரம், பஞ்ச மஹாயஜ்ஞம் முதலான யாகங்களைச் செய்வதாலும்,

**ரிஷி ருணத்தை** பிரம்மசரிய விரதம் பூண்டு வேதங்களைக் கசடறக் கற்பதாலும்,

**பித்ரு ருணத்தை** வேதசாஸ்திரங்களைக் கற்றறிந்த பின், தன் ஜாதிக்கேற்ற கன்னிகையை மணந்து, அவளுடன் தர்மங்களைச் செய்துகொண்டு நன்மக்களைப் பெறுவதாலும் தீர்த்தல் வேண்டும்.

ஒவ்வொருவனும் தம் முன்னோர்களுக்குச் செலுத்த வேண்டிய மற்றும் சில கடமைகள் உள்ளன.

அதாவது, தம் தகப்பனார் இறந்தபிறகு, அவருக்கும் அவருடைய முன்னோர்களுக்கும் சிராத்த தர்ப்பணாதிகளைச் செய்வதே அத்தகைய கடமைகளாகும்.

"பித்ருக்களுக்குச் செய்யவேண்டியவைகளாக ஏற்பட்டிருக்கும் கடமைகளைச் செலுத்தாவிடில் பித்ருசாபத்திற்கு ஆளாக நேரிடும். அதன் பயனாக வம்சம் விளங்காமற் போய்விடும்" என்று சாஸ்திரம் எச்சரிக்கிறது.

RangaRakes tamilnavarasam.com

மற்றும் வாழ்க்கையில் எத்துறையிலும் முன்னேற முடியாது. இது அனுபவத்தில் கண்ட பலன்.

''பித்ருதர்ப்பணம்'' என்பதற்குப் பித்ருக்களைத் திருப்தி செய்வித்தல் என்று அர்த்தம்.

இங்கு பித்ருக்கள் என்பது இறந்துபோன பித்ரு வர்க்கம், மாதாமஹ வர்க்கம் என்னும் இரு வர்க்கங்களையும் குறிக்கும்.

ஆகையால், தன்குலம் தழைத்தோங்கி, தானும் நன்றாக வாழ வேண்டும் என்ற எண்ணமுள்ளவர்கள் யாவரும்பித்ருக்களுக்காகச் செய்யும் கர்மங்களில் அச்ரத்தையாக இருக்கக்கூடாது. 'ஏதோ செய்தாக வேண்டும்' என்றெண்ணி ச்ரத்தையில்லாமற் செய்யும் கர்மாக்களைப் பித்ருக்கள் ஏற்றுக்கொள்வதில்லை.

ஆகையால் மிக்க பக்தியுடனும், ச்ரத்தையுடனும் பித்ரு கர்மங்களைச் செய்யவேண்டும்.

இவ்வித பித்ருகர்மங்களில் பிரதிவருஷம் செய்ய வேண்டிய சிராத்தத்தைத் தவிர, அமாவாஸ்யை, மாஸ ஸங்க்ரமணங்கள், சூரிய சந்திர கிரஹணங்கள் ஆகிய காலங்களில் செய்யவேண்டிய சிராத்தங்களுக்குப் பிரதிநிதியாகச் செய்யப்படும் தில தர்ப்பணங்கள் மிகமிக முக்கியமானவையாகும். இவைகளை விவரமாக இப்புத்தகத்தில் கொடுத்திருக்கிறோம்.

## யார், யாருக்குத் தர்ப்பணம் செய்வது?

தகப்பனார் இல்லாதவர்கள் மட்டுமே தர்ப்பணம் செய்யவேண்டிய அதிகாரிகள்.

அத்தகைய தர்ப்பணம் பித்ரு (தகப்பனார்) வர்க்கத்தில் 6 பேர், மாதாமஹ (தாய்வழி பாட்டனார்) வர்க்கத்தில் 6 பேர் ஆக 12 பேருக்குச் செய்ய வேண்டும்.

மாதாமஹர் (தாய்வழி பாட்டனார்) ஜீவித்திருந்தால் அந்த வர்க்கத்திற்குத் தர்ப்பணம் செய்யவேண்டியதில்லை. பித்ரு வர்க்கத்தைச் சேர்ந்த 6 பேருக்கு மட்டும் தர்ப்பணம் செய்தால் போதும். இந்த விவரங்களை அடுத்த பக்கத்தில் குறிப்பிட்டிருக்கிறோம்.

RangaRakes



## பொதுவாகத் தர்ப்பணம் செய்ய வேண்டிய

### பித்ரு வர்க்கம்

| புருஷான் | ஸ்த்ரீகள் |
|---|---|
| 1. பிதா=தகப்பனார் | 4. மாதா=தாயார் |
| 2. பிதாமஹர்=பாட்டனார் (தகப்பனாருக்குத் தகப்பனார்) | 5. பிதாமஹி=பாட்டி (தகப்பனாருக்குத்தாயார்) |
| 3. ப்ரபிதாமஹர்=பாட்டனாருக்குத் தகப்பனார் | 6. ப்ரபிதாமஹி= பாட்டனாருக்குத் தாயார் |

### மாதாமஹ வர்க்கம்

| | |
|---|---|
| 7. மாதாமஹர்=தாயாருக்குத் தகப்பனார் (பாட்டனார்) | 10. மாதாமஹி=பாட்டி (தாயாருக்குத் தாயார்) |
| 8. மாது:பிதாமஹர்= தாய்ப்பாட்டனாருக்குத் தகப்பனார். | 11. மாது: பிதாமஹி= தாய்ப்பாட்டனாருக்குத் தாயார். |
| 9. மாது: ப்ரபிதாமஹர்= தாய்ப்பாட்டனாருக்குப் பாட்டனார். | 12. மாது: ப்ரபிதாமஹி= தாய்ப்பாட்டனாருக்குப் பாட்டி. |

மேற்கண்ட 12 பேரும் இறந்திருந்தால் மேற்கண்டபடி 12 பேர்களுக்குத் தர்ப்பணம் செய்ய வேண்டும். இவர்களில் யாராவது ஒருவர் பிழைத்திருந்தால், அவருக்கு முன்னோர் ஒருவரைத் தர்ப்பணத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

உதாரணமாக : பித்ருவர்க்கத்தில் பிதாமஹர் (பாட்டனார்) பிழைத்திருந்தால் —வரிசையாக, பித்ரு, பிது: பிதாமஹ (பாட்டனாரின் தகப்பனார்) பிது:ப்ரபிதாமஹர் (பாட்டனாருக்குப் பாட்டனார்) களுக்குத் தர்ப்பணம் செய்யவேண்டும்.

அம்மாதிரியே தாயார் பிழைத்திருந்தால்,பிதாமஹி ப்ரபிதாமஹி, பிது: ப்ரபிதாமஹி என்ற வரிசையில் தர்ப்பணம் செய்யவேண்டும்.

தாயார் இல்லாமல், பிதாமஹியிருந்தால், மாதா, ப்ரபிதாமஹி, பிது:ப்ரபிதாமஹி இவர்களுக்குத் தர்ப்பணம் செய்யவேண்டும்.

இவ்விதமாகவே, தர்ப்பணம் செய்ய ஆரம்பிப்பதற்கு முன், யார் யாருக்குத் தர்ப்பணம் செய்ய

tamilnavarasam.com

வேண்டும், அவர்கள் பெயர், கோத்திரம் இவைகளை விவரமாக நினைவில் வைத்துக்கொண்டு தர்ப்பணம் செய்ய ஆரம்பிக்க வேண்டும்.

நினைவில் இருப்பதற்காகக் கீழ்க்கண்ட இடத்தில் குறிப்பு எழுதிக் கொள்ளலாம்.

## தர்ப்பணத்தில் பித்ருக்கள்

| வ எண். | கோத்ரம் | சர்மா நாம | ரூபம் | பித்ரு |
| --- | --- | --- | --- | --- |
| | **பித்ரு வர்க்கம் புருஷர்கள்** | | | |
| 1 | .............. | .............. | வஸு | பிதா |
| 2 | .............. | .............. | ருத்ர | |
| 3 | .............. | .............. | ஆதித்ய | |
| | **பித்ரு வர்க்கம் ஸ்த்ரீகள்** | | | |
| 1 | .............. | .............. | வஸுபத்நீ | |
| 2 | .............. | .............. | ருத்ரபத்நீ | |
| 3 | .............. | .............. | ஆதித்ய பத்நீ | |
| | **மாதாமஹவர்க்கம் புருஷர்கள்** | | | |
| 1 | .............. | .............. | வஸு | |
| 2 | .............. | .............. | ருத்ர | |
| 3 | .............. | .............. | ஆதித்ய | |
| | **மாதாமஹவர்க்கம் ஸ்த்ரீகள்** | | | |
| 1 | .............. | .............. | வஸுபத்நீ | |
| 2 | .............. | .............. | ருத்ரபத்நீ | |
| 3 | .............. | .............. | ஆதித்ய பத்நீ | |

குறிப்பு:— மேற்கண்ட விவரங்களைத் தர்ப்பண மந்த்ரங்களுக்குக் கீழே புள்ளியிட்ட இடங்களிலும் எழுதி வைத்துக்கொள்ளவும்.

RangaRakes



# ஒரு விண்ணப்பம்

ஸ்ரீவைஷ்ணவ ஆஸ்திகர்களனைவரும் ப்ருஹஸ்பதி இல்லாதபோது, தாமே பித்ரு தர்ப்பணங்களைச் செய்து கொள்ளும் வகையில் இப்புத்தகம் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் ப்ருஹஸ்பதிகளின் அவசியத்தைப் புறக்கணிப்பதாகக் கருதக்கூடாது. ப்ருஹஸ்பதிகளை வைத்துக்கொண்டே எல்லாவிதமான வைதிக கர்மங்களையும் செய்வதே உத்தமமானதும், சாஸ்த்ர ஸம்மதமானதுமாகும்.

ஆனால் சென்னை, பம்பாய் போன்றபெரிய நகரங்களில் ஒரே சமயத்தில் பல இடங்களுக்குப் போகவேண்டியிருப்பதால் ப்ருஹஸ்பதிகள் குறிப்பிட்ட சமயத்தில் வராமையும், அதனால் பலவிதமான சிரமங்கள் ஏற்படுவதும் அனுபவத்தில் இருந்து வருகிறது.

தவிர, விஷயம் தெரிந்த பெரியவர்கள் இல்லாத கிராமங்களிலும் சிலருக்குத் தர்ப்பணாதிகளைச் செய்வது சிரமமாகி விடுகிறது. லௌகிகமுறையில் வேறு ஊருக்குச் சென்ற பொழுது சில உத்தியோகஸ்தர்களுக்கும் ப்ருஹஸ்பதி கிடைக்காத நிலை ஏற்படுவது சகஜம்.

மேற்கண்ட சமயங்களில் இப்புத்தகம் மிக்க உபயோகமாக இருக்கும். இத்தகைய விசேஷ தினங்களில் வைதிக ஸம்ப்ரதாயத்தின் சின்னமாக விளங்கும் தம் குடும்ப ப்ருஹஸ்பதி (தர்ப்பணம் செய்விக்க தக்க ஸமயத்தில் வராவிடினும்) அன்றைய தினம் எப்பொழுது தம் வீட்டிற்கு வந்தாலும், அவரைக் கௌரவமாக வரவேற்று, ஸேவித்து, வெற்றிலை, பாக்கு, பழம் தக்ஷிணை முதலியவைகளை ஸமர்ப்பித்து மனம் குளிர அவருடைய ஆசீர்வாதத்தைப் பெறுவதே பித்ருக்களுக்கு மிகுந்த திருப்தியை அளிக்கும். அதனால் ஸகல சௌக்யங்களும் உண்டாவது திண்ணம்.

**பதிப்பாசிரியர்**

tamilnavarasam.com

## தென்கலை
## யஜுர்வேதிகளின்
# அமாவாஸ்யை தர்ப்பணம்

காலையில் நீராடி, ஸந்த்யாவந்தனம், மாத்யான்னிகம், திருவாராதனம் இவைகளை முடித்தபிறகு, கைகால்களைச் சுத்தம் செய்துகொண்டு, இரண்டு தடவை ஆசமனம் செய்து, 3 தர்ப்பங்களால் செய்த பவித்திரத்தை மோதிர விரலில் தரித்து, அத்துடன் 2 தர்ப்பங்களை இடுக்கிக்கொண்டு, சில தர்ப்பங்களை ஆஸனமாகப் போட்டுக்கொண்டு, கிழக்கு முகமாக உட்கார்ந்து ப்ராணாயாமம் செய்யவும்.

### ஸங்கல்பம்
(பொது)

ஶுக்லாம்ப3ரத4ரம் விஷ்ணும் ஶஶிவர்ணம் சதுர்பு4ஜம் |
ப்ரஸந்நவத3நம் த்4யாயேத் ஸர்வ விக்4நோப ஶாந்தயே |
யஸ்ய த்3விரத3 வக்த்ராத்3யா: பாரிஷத்3யா: பரஶ்ஶதம் |
விக்4நம் நிக்4நந்தி ஸததம் விஷ்வக்ஸேநம் தமாஶ்ரயே ||

பூணூலைப் பிராசீனாவீதமாகப் போட்டுக்கொள்ள வேண்டும்.

*ஹரிரோம் தத்

ஶ்ரீகோ3விந்த3 கோ3விந்த3 கோ3விந்த3— அஸ்ய ஶ்ரீப4க3வத:— மஹாபுருஷஸ்ய— விஷ்ணோராஜ்ஞயா— ப்ரவர்தமாநஸ்ய — ஆத்3ய ப்3ரஹ்மண:— த்3விதீய பரார்தே4— ஶ்ரீஶ்வேத வராஹகல்பே — வைவஸ்வத மந்வந்தரே— அஷ்டாவிம்ஶதிதமே கலியுகே — ப்ரத2மே பாதே3 — ஜம்பூ3த்3வீபே — பா4ரதவர்ஷே — ப4ரத க2ண்டே3 — ஶகாப்3தே3, — மேரோ: த3க்ஷிணே பார்ஶ்வே அஸ்மிந் வர்தமாநே வ்யாவஹாரிகே— ப்ரப4வாதி3 ஷஷ்டி ஸம்வத்ஸராணாம் மத்4யே...நாம ஸம்

RangaRakes



வத்ஸரே த3க்ஷிணாயநே (அல்லது, உத்தராயணே)... ருதௌ...மாஸே க்ருஷ்ணபக்ஷே—அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ2...வாஸரயுக்தாயாம்.........நக்ஷத்ரயுக்தாயாம், ஶ்ரீ விஷ்ணுயோக ஶ்ரீ விஷ்ணுகரண சுபயோக சுபகரண ஏவங்கு3ண விஶேஷண விஶிஷ்டாயாம் அஸ்யாம் அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ2—ஶ்ரீ ப4க3வதாஜ்ஞயா பகவத்கைங்கர்யரூபம்...கோ3த்ராணாம்.... ஶர்மணாம் வஸுருத்3ராதி3த்யஸ்வரூபாணாம்; அஸ்மத் பித்ரு, பிதாமஹ, ப்ரபிதாமஹாநாம்—மாத்ரு, பிதாமஹீ, ப்ரபிதாமஹீநாம், ...கோத்ராணாம் வஸுருத்3ராதி3த்யஸ்வரூபாணாம் அஸ்மந்மாதாமஹ, மாது: பிதாமஹ, மாது:ப்ரபிதாமஹாநாம், மாதாமஹீ மாது: பிதாமஹீ—மாது: ப்ரபிதாமஹீநாம் உப4ய வம்ஶ பித்ரூணாம் அக்ஷய்யத்ருப்த்யர்த2ம் *த3ர்ஶ ஶ்ராத்3த4ம் திலதர்ப்பண ரூபேண அத்ய கரிஷ்யே' என்று ஸங்கல்பித்து, இடுக்குப்புல்லை தென்புறம் எறிந்துவிட வேண்டும்.

பிறகு 4 தர்ப்பங்களை தெற்கு நுனியாக கீழ் பக்கத்திலும் அதற்கு மேற்கில் 4 தர்ப்பங்களைக் தெற்கு நுனியாகவும் போட்டு,

அவைகளின் மீது கிழக்குப் பக்கத்தில் (5 அல்லது 3 தர்ப்பங்களால் செய்த) ஒரு கூர்ச்சத்தை தெற்கு நுனியாகவும், மேற்கு பக்கத்தில் மற்றொரு கூர்ச்சத்தை தெற்கு நுனியாகவும் வைக்கவேண்டும்.

### ஆவாஹநம் (பித்ருவர்க்கம்)

—பிறகு தெற்கு முகமாக நின்றுகொண்டு.

''ஆயாத பிதர:—ஸோம்யா க3ம்பீ4ரை:—
பதி2பி4: பூர்வ்யை:— ப்ரஜாமஸ்மப்4யம்
த3த3தோ ரயிஞ்ச தீ3ர்கா4யுத்வஞ்ச
ஶதஶாரத3ஞ்ச''

---

*''தர்சச்ராத்தம் தில தர்ப்பண ரூபேண கரிஷ்யே'' என்றும் சொல்வது வழக்கத்திலுள்ளது. ''தர்சச்ராத்த ப்ரதிநிதி தில தர்ப்பணம் கரிஷ்யே'' என்றும் சிலர் சொல்கிறார்கள்: திதி, நக்ஷத்ரம் முதலியன தெரியாதபோது விஷ்ணுதிதௌ, விஷ்ணு நக்ஷத்ரே என்றும் சொல்லலாம். தெரிந்து செய்வதுதான் நல்லது.

tamilnavarasam.com

.......கோ3த்ராந் (1).........(2).......(3)...... ஶர்மண: வஸுருத்3ராதி3த்யரூபாந் அஸ்மத் பித்ரு, *பிதாமஹ, ப்ரபிதாமஹாந்...கோத்ரா:...நாம்நீ: அஸ்மந் மாத்ரு, பிதாமஹீ, ப்ரபிதாமஹீஶ்ச ஆவாஹயாமி.

என்று சொல்லி, இடது முழங்காலைத் தரையில் ஊன்றி, கிழக்கில் போட்டிருக்கும் கூர்ச்சத்தின்மீது எள்ளைச் சேர்க்கவும்.

## ஆஸநம் (பித்ருவர்க்கம்)

மூன்று தர்ப்பத்தால் செய்த மற்றொரு கூர்ச்சத்தைக் கையில் எடுத்துக்கொண்டு,

''ஸக்ருத3ாச்சி2ந்நம் ப3ர்ஹிரூர்ணா
ம்ருது3ஸ்யோநம்—பித்ருப்4யஸ்த்வா
ப4ராம்யஹம்—அஸ்மிந்த்ஸீத3ந்து மே பிதர:
ஸோம்யா:—பிதாமஹா:—ப்ரபிதாமஹாஶ்ச
அநுகை3ஸ் ஸஹ''

........கோத்ராணாம்... (1).......(2).......(3)........ ஶர்மணாம் வஸுருத்3ராதி3த்ய ரூபாணாம் அஸ்மத் பித்ரு பிதாமஹ, ப்ரபிதாமஹாநாம்...கோத்ராணாம்...நாம்நீநாம் அஸ்மந் மாத்ரு, பிதாமஹீ, ப்ரபிதாமஹீநாம்ச இத3மாஸநம்' என்று சொல்லி கிழக்கில் உள்ள கூர்ச்சத்தின் மீது ஒரு கூர்ச்சத்தைத் தெற்கு நுனியாகச் சேர்க்க வேண்டும்.

'இதம் அர்ச்சனம்' என்று எள்ளைச் சேர்த்துவிட்டு,

''ஊர்ஜம் வஹந்தீ:—அம்ருதம் க்4ருதம் பய: கீலாலம் பரிஸ்ருதம் ஸ்வதா4ஸ்த2 தர்ப்பயத மே அஸ்மத் பித்ரூந்''

என்று எள்ளும் ஜலமும் இரு கைகளில் சேர்த்து எடுத்து இரு கட்டை விரல்களும் கலக்காமல் வலது கட்டை விரல் இடுக்கால் கூர்ச்சத்தின்மீது விடவும்.

## ஆவாஹநம் (மாதாமஹவர்க்கம்)

ஆயாத மாது: பித்ர:—ஸோம்யா க3ம்பீ4ரை:—பதி3பி4:—பூர்வ்யை: ப்ரஜாமஸ்மப்4யம் த3த3தோ ரயிஞ்ச—தீ3ர்க4ாயுத்வஞ்ச ஶதஶாரத3ஞ்ச |

*இம்மாதிரி இடங்களில் தர்ப்பணம் செய்யவேண்டிய பித்ருக்களைத் தக்கபடி மாற்றிச் சொல்லிக்கொள்ளவும்.

RangaRakes



.....கோத்ராந்(1)........(2)..........(3)..... .. ஶர்மண: வஸுருத்ராதித்ய ரூபாந், அஸ்மந் மாதாமஹ, மாது: பிதாமஹ, மாது: ப்ரபிதாமஹாந், ..... கோத்ரா:......நாம்நீ: மாதாமஹி, மாது: பிதாமஹி, மாது: ப்ரபிதாமஹீஶ்ச ஆவாஹயாமி,

என்று எள்ளை மேலண்டை கூர்ச்சத்தின்மீது சேர்க்கவும்.

## ஆஸநம் (மாதாமஹவர்க்கம்)

ஸக்ருத3ாச்சி2ந்நம் ப3ர்ஹிரூர்ணா ம்ருது3 ஸ்யோநம்—பித்ருப்4யஸ் த்வா ப4ராம்யஹம் — அஸ்மிந் ஸீத3ந்து மே பிதர: ஸோம்யா:— பிதாமஹா:—ப்ரபிதாமஹாஶ்ச அநுகை3ஸ் ஸஹ |

.......கோ3த்ராணாம் (1).........(2).......(3)....... ஶர்மணாம் வஸுருத்3ராதி3த்ய ரூபாணாம் அஸ்மந் மாதாமஹ, மாது: பிதாமஹ, மாது: ப்ரபிதாமஹாநாம்,... கோத்ராணாம்......நாம்நீநாம் மாதாமஹீ, மாது:பிதாமஹீ. மாது: ப்ரபிதாமஹீநாம்ச இத3ம் ஆஸநம்.

என்று 3 தர்பங்களுள்ள கூர்ச்சத்தை ஆஸனமாகச் சேர்த்து, 'இதம் அர்ச்சனம்' என்று எள்ளைச் சேர்த்து,

''ஊர்ஜம் வஹந்தீ:—அம்ருதம் க்4ருதம் பய: கீலாலம் பரிஸ்ருதம் ஸ்வதா4ஸ்த2—தர்ப்பயத மே அஸ்மந் மாது: பித்ரூந் ||''

என்று எள்ளும் ஜலமும் விடவேண்டியது. பிறகு தெற்கு முகமாக இருந்து, இடது முழங்காலைத் தரையில் ஊன்றி ''தர்ப்பணம்'' என்பதின் கீழ் குறிப்பிட்டபடி இரண்டு வர்க்கத்தாரையும் சொல்லி இருகைகளையும் சேர்த்துக் கொண்டு, இடக்கையில் உள்ள பாத்திரத்திலிருந்து தீர்த்தத்தை (வலக்கையில்) வலக்கை கட்டை விரல் இடுக்கால் மும்மூன்று முறை தர்ப்பணம் செய்ய வேண்டியது.

tamilnavarasam.com

# தர்ப்பணம்

## பித்ருவர்க்கம் (புருஷர்கள்)

**பிதாவுக்கு**

(1) "உதீ$^3$ரதாம் அவர உத்பர ஸ:—உந்மத்$^4$யமா: பிதர: ஸோம்யாஸ:—அஸும்ய ஈயு: அவ்ருகா ருதஜ்ஞா:—தே நோவந்து பிதரோ ஹவேஷு."

".....கோ$^3$த்ராந்............ஶர்மண: வஸுரூபாந் அஸ்மத் பித்ரூந் ஸ்வத$^4$ா நமஸ் தர்ப்பயாமி"

(2) "அங்கி$^3$ரஸோ ந: பிதரோ நவக்$^3$வா அத$^2$ர்வாணோ ப்$^4$ருக$^3$வ: ஸோம்யாஸ: — தேஷாம் வயம் ஸுமதௌ யஜ்ஞியாநாம் அபிப$^4$த்$^3$ரே ஸௌமநஸே ஸ்யாம"

"......கோ$^3$த்ராந்.......ஶர்மண:, வஸுரூபாந், அஸ்மத் பித்ரூந் ஸ்வத$^4$ா நமஸ் தர்ப்பயாமி.

(3) "ஆயந்து ந: பிதர: மநோஜவஸ: அக்$^3$நிஷ்வாத்தா:—பதி$^2$பி$^4$ர் தே$^3$வயாநை: — அஸ்மிந் யஜ்ஞே ஸ்வத$^4$யா மத$^3$ந்து — அதிப்$^3$ருவந்து — தே அவந்த் — வஸ்மாந்"

.....கோ$^3$த்ராந்......ஶர்மண:, வஸுரூபாந், அஸ்மத் பித்ரூந் ஸ்வதா$^4$ நமஸ் தர்ப்பயாமி.

**பிதாமஹனுக்கு**

(1) 'ஊர்ஜம் வஹந்தீ: அம்ருதம் க்$^4$ருதம் பய: —கீலாலம் பரிஸ்ருதம் ஸ்வத$^4$ாஸ்த$^2$ — தர்ப்பயத மே பித்ரூந்"

.......கோ$^3$த்ராந்..........ஶர்மண:, ருத்$^3$ரரூபாந், அஸ்மத் பிதாமஹாந் ஸ்வதா நமஸ் தர்ப்பயாமி.

(2) "பித்ருப்$^4$ய: ஸ்வதா$^4$விப்$^4$ய: ஸ்வதா$^4$ நம: —பிதாமஹேப்$^4$ய: ஸ்வதா$^4$விப்$^4$ய: ஸ்வதா$^4$ நம:— ப்ரபிதாமஹேப்$^4$ய: ஸ்வதா$^4$விப்$^4$ய: ஸ்வதா$^4$ நம:— அக்ஷந் பிதர:"

.........கோ$^3$த்ராந்.......ஶர்மண: ருத்$^3$ரரூபாந் அஸ்மத் பிதாமஹாந் ஸ்வதா$^4$ நமஸ் தர்ப்பயாமி.

RangaRakes



(3) "யே சேஹ பிதர: யே ச நேஹ யாக்$^3$ம்ஶ்ச வித்$^3$ம யாக்$^3$ம் உச ந ப்ரவித்$^3$ம அக்நே தாந் வேத்த யதி$^3$ தே ஜாதவேத: தயா ப்ரத்தக்$^3$ம் ஸ்வத$^4$யா மத$^3$ந்து"

.......கோ$^3$த்ராந்.........ஶர்மண:, ருத்ர ரூபாந் அஸ்மத் பிதாமஹாந் ஸ்வத$^4$ா நமஸ் தர்ப்பயாமி.

**ப்ரபிதாமஹனுக்கு**

(1) "மது$^4$ வாதா ருதாயதே—மது$^4$ க்ஷரந்தி ஸிந்த$^4$வ:—மாத்$^4$வீர் ந: ஸந்த்வோஷதீ$^4$:"

.....கோத்ராந்.......ஶர்மண: ஆதி$^3$த்யரூபாந், அஸ்மத் ப்ரபிதாமஹாந் ஸ்வதா நமஸ் தர்ப்பயாமி.

(2) "மது$^4$ நக்தமுதோஷஸி—மது$^4$மத் பார்த்தி$^2$வக்$^3$ம் ரஜ:—மது$^4$ த்$^3$யௌர்:—அஸ்து ந: பிதா"

.......கோ$^3$த்ராந்.........ஶர்மண: ஆதி$^3$த்யரூபாந் அஸ்மத் ப்ரபிதாமஹாந் ஸ்வத$^4$ா நமஸ் தர்ப்பயாமி.

(3) "மது$^4$மாந் நோ வநஸ்பதி: — மது$^4$மாக்$^3$ம் அஸ்து ஸூர்ய:—மாத்$^4$வீர் கா$^3$வோ ப$^4$வந்து ந:"

......கோ$^3$த்ராந்.....ஶர்மண: ஆதி$^3$த்யரூபாந் அஸ்மத் ப்ரபிதாமஹாந் ஸ்வத$^4$ா நமஸ் தர்ப்பயாமி.

## பித்ருவர்க்கம் (ஸ்த்ரீகள்)

**மாதா** (தாயார்)

...............கோ$^3$த்ரா:......நாம்நீ: வஸுபத்நீரூபா: அஸ்மந்மாத்ரூ: ஸ்வத$^4$ா நமஸ் தர்ப்பயாமி. (3 தடவை தர்ப்பணம்.)

**பிதாமஹி** (தகப்பனார்வழி பாட்டி)

...கோ$^3$த்ரா....நாம்நீ: ருத்ரபத்நீரூபா: அஸ்மத் பிதாமஹீ: ஸ்வத$^4$ா நமஸ் தர்ப்பயாமி, (3 தடவை தர்ப்பணம்.)

tamilnavarasam.com

**ப்ரபிதாமஹி** (தகப்பனுருக்குப் பாட்டி)

.......கோ3த்ரா: நாம்நீ: ஆதி3த்யபத்நீரூபா: அஸ்மத் ப்ரபிதாமஹீ: ஸ்வத4ா நமஸ் தர்ப்பயாமி. (3 தடவை தர்ப்பணம்.) **பிறகு**

.....கோ3த்ராந், ஜ்ஞாதாஜ்ஞாத பித்ருந் ஸ்வத4ா நமஸ் தர்ப்பயாமி என்று 3 தடவையும்.....கோத்ரா: ஜ்ஞாதாஜ்ஞாத பித்ரு பத்நீ: ஸ்வத4ா நமஸ் தர்ப்பயாமி, என்று 3 தடவையும் தர்ப்பணம் செய்யவும்.

பிறகு, ஊர்ஜம் வஹந்தீ: அம்ருதம் க்4ருதம் பய: கீலாலம் பரிஸ்ருதம் ஸ்வதா4ஸ்த2 தர்பயத மே பித்ருந் |

என்று பித்ருவர்க்க புக்னத்தின்மீது எள்ளுடன் ஜலத்தை விட்டு "த்ருப்யத, த்ருப்யத, த்ருப்யத" என்று சொல்லவும்.

## மாதாமஹ வர்க்கம் (புருஷர்கள்)

(குறிப்பு: மாதாமஹர் (தாயாரின் தகப்பனார்) ஜீவித்திருந்தால் இந்த வர்க்கத்திற்குத் தர்ப்பணம் செய்யவேண்டியதில்லை.

**மாதாமஹருக்கு** (தாய்வழிப் பாட்டனார்)

(1) "உதீ3ரதாம் அவர உத்பராஸ:—உந்மத்4யமா: பிதர: ஸோம்யாஸ: —அஸும்ய ஈயு: —அவ்ருகா ரிதஜ்ஞா: —தே நோவந்து பிதரோ ஹவேஷு".....கோ3த்ராந்....ஶர்மண: வஸுரூபாந் அஸ்மந் மாதாமஹாந் ஸ்வத4ா நமஸ் தர்ப்பயாமி.

(2) அங்கி3ரஸோ ந: பிதரோ நவக்3வா —அத2ர்வாணோ ப்4ருக3வ: ஸோம்யாஸ: —தேஷாம் வயம் ஸுமதௌ யஜ்ஞியாநாம் —அபி ப4த்3ரே ஸௌமநஸே ஸ்யாம".....கோத்ராந்....ஶர்மண: வஸுரூபாந் அஸ்மந் மாதாமஹாந் ஸ்வத4ாநமஸ் தர்ப்பயாமி.

(3) "ஆயந்து ந:பிதர: —மநோஜவஸ: அக்3நிஷ்வாத்தா: —பதி2பிர்தே3வயாநை: — அஸ்மிந் யஜ்ஞே ஸ்வத4யா மத3ந்து — அதிப்3ருவந்து —தே அவந்த்வஸ்மாந்".....கோ3த்ராந்....ஶர்மண: வஸுரூபாந் அஸ்மந் மாதாமஹாந் ஸ்வத4ாநமஸ் தர்ப்பயாமி.



**மாது: பிதாமஹருக்கு**

(1) ஊர்ஜம் வஹந்தீ: —அம்ருதம் க்4ருதம் பய:— கீலாலம் பரிஸ்ருதம் ஸ்வதா4ஸ்த2 —தர்பயத மே மாது: பித்ருந் | "....கோ3த்ராந்....ஶர்மண: ருத்3ரரூபாந் அஸ்மந் மாது: பிதாமஹாந் ஸ்வத4ா நமஸ் தர்ப்பயாமி.

(2) "பித்ருப்4ய: ஸ்வத4ாவிப்4ய: ஸ்வதா4 நம:— பிதாமஹேப்4ய: ஸ்வதா4விப்1ய: ஸ்வதா4 நம: — ப்ரபிதாமஹேப்4ய: ஸ்வதா4விப்4ய: ஸ்வதா4நம: —அக்ஷந் மாது: பிதர:".....கோ3த்ராந்....ஶர்மண: ருத்3ரரூபாந் அஸ்மந் மாது: பிதாமஹாந் ஸ்வத4ா நமஸ் தர்பபயாமி.

(3) "யே சேஹ பிதர: —யே ச நேஹ —யாகும்3ஶ்ச வித்3ம —யாகு3ம் உச ந ப்ரவித்3ம —அக்3நே தாந் வேத்த3 —யதி3தே ஜாத வேத3: —தயா ப்ரத்தகு3ம் ஸ்வத4யா மத3ந்து' '....கோ3த்ராந்......ஶர்மண: ருத்3ரரூபாந் அஸ்மந் மாது: பிதாமஹாந் ஸ்வத4ா நமஸ் தர்ப்பயாமி.

**மாது: ப்ரபிதாமஹருக்கு**

(1) "மது4வாதா ருதாயதே —மது4 க்ஷரந்தி ஸிந்த4வ:— மாத்4வீர் ந: ஸந்த்வோஷதீ4:"...... கோ3த்ராந்...ஶர்மண: ஆதி3த்யரூபாந் அஸ்மந்மாது: ப்ரபிதாமஹாந் ஸ்வத4ாநமஸ் தர்ப்பயாமி.

(2) மது4 நக்தமுதோஷஸி—மது4மத்பார்தி2வகு3ம் ரஜ:—மது4 த்3யௌ:—அஸ்து ந: பிதா"...கோ3த்ராந் .....ஶர்மண: ஆதி3த்யரூபாந் அஸ்மந் மாது: ப்ரபிதாமஹாந் ஸ்வத4ா நமஸ் தர்ப்பயாமி.

RangaRakes

tamilnavarasam.com

(3) ''மது4மாந் நோ வநஸ்பதி:— மது4மாகு3ம் அஸ்து ஸூர்ய:— மாத்4வீர் கா3வோ ப4வந்து ந:''.... கோ3த்ராந் ஶர்மண: ஆதி3த்யரூபாந் அஸ்மந் மாது: ப்ரபிதாமஹாந் ஸ்வத4ா நமஸ் தர்ப்பயாமி.

## மாதாமஹ வர்க்கம் (ஸ்த்ரீகள்)

**மாதாமஹி**

......கோத்ரா:...... .நாம்நீ: வஸுபத்நீ ரூபா: மாதாமஹீ: ஸ்வத4ா நமஸ் தர்ப்பயாமி. (3 தடவை தர்ப்பணம்.)

**மாது: பிதாமஹி**

......கோ3த்ரா:......நாம்நீ: ருத்3ரபத்நீரூபா: மாது: பிதாமஹீ: ஸ்வத4ா நமஸ் தர்ப்பயாமி. (3 தடவை தர்ப்பணம்.)

**மாது: ப்ரபிதாமஹி**

......கோ3த்ரா:......நாம்நீ: ஆதி3த்யபத்நீரூபா: மாது: ப்ரபிதாமஹீ: ஸ்வத4ா நமஸ் தர்ப்பயாமி (3 தடவை தர்ப்பணம்.)

கோத்ராந் ஜ்ஞாதாஜ்ஞாத மாது: பித்ரூந் ஸ்வதா4நமஸ் தர்பயாமி. (3 தடவை தர்ப்பணம்.)

....கோத்ரா: ஜ்ஞாதாஜ்ஞாத மாது: பித்ரு பத்நீ: ஸ்வதா4 நமஸ்தர்பயாமி (3 தடவை தர்ப்பணம்.)

ஊர்ஜம் வஹந்தீ: அம்ருதம் க்4ருதம் பய: கீலாலம் பரிஸ்ருதம் ஸ்வதா4ஸ்த2 தர்பயத மே மாது: பித்ரூந் ||

— என்று மாத்ருவர்க்க புக்னத்தின்மேல் முன்போல் எள்ளும் ஜலமும் விடவும். ''த்ருப்யத த்ருப்யத த்ருப்யத'' என்று சொல்லவும். எழுந்து கையைக்கூப்பிக்கொண்டு,

''நமோ வ: பிதரோ ரஸாய—நமோ வ: பிதர: ஶுஷ்மாய—நமோ வ: பிதரோ ஜீவாய—நமோ வ: பிதர: ஸ்வத4ாயை— நமோ வ: பிதரோ மந்யவே — நமோ வ: பிதரோ கோ4ராய — பிதரோ நமோ வ:— ய ஏதஸ்மிந் லோகேஸ்த2 யுஷ்மாகு3ம் ஸ்தே2நு — யேஸ்மிந் லோகே மாம்தேநு, ய ஏதஸ்மிந் லோகே ஸ்த்த2 —யூயம் தேஷாம் வஸிஷ்டா2 பூ4யாஸ்த2 யேஸ்மிந் — லோகே — அஹம் தேஷாம் வஸிஷ்டோ2 பூ4யாஸம்''



என்று சொல்லி, உபவீதம் செய்துகொண்டு, புக்னங்களை மூன்றுதடவை பிரதக்ஷிணம் செய்து, ஸேவித்து அபிவாதயே....நாமா அஹமஸ்மி போ:' என்று அபிவாதநம் செய்ய வேண்டும்.

## உத்வாஸநம்

பிறகு ப்ராசீனாவீதம் செய்து கொண்டு, எள்ளைக் கையில் எடுத்துக்கொண்டு, ''.....கோத்ராந்....ஶர்மண: அஸ்மத் பித்ரு பிதாமஹ ப்ரபிதாமஹாந், ஸபத்நீகாந், கோத்ராந் ஶர்மண: ஸபத்நீகாந் மாதாமஹ மாது:பிதாமஹ மாது: ப்ரபிதாமஹாம்ஶ்ச யத2ாஸ்தாநம் ப்ரதிஷ்டா2பயாமி'' என்று சொல்லி நான்கு புக்னங்களின்மீது எள்ளைச் சேர்த்துவிட்டு, பிறகு புக்னங்களை அவிழ்த்து, எல்லா நுனிகளையும் ஒன்றுசேர்த்து, எள்ளையும் கையில் வைத்துக்கொண்டு,

''யேஷாம் ந பிதா ந ப்4ராதா
ந ப3ந்து4 : நாந்ய கோ3த்ரிண: |
தே த்ருப்தி மகி2லா யாந்து
மயா த்யக்தை: குஶைஸ் திலை: ||

என்று தீர்த்தத்தைச் சேர்த்து, கால் படாத இடத்தில் கீழே விடவும். பிறகு உபவீதம் செய்துகொண்டு, ஆசமனம் செய்து, பவித்திரத்தை அவிழ்த்துவிடவும். காயேநவாசா....ஶ்ரீமந் நாராயணாயேதி ஸமர்ப்பயாமி என்று கூறுவதும் வழக்கம்.

RangaRakes
tamilnavarasam.com

# ஸங்க்ரமண தர்ப்பணம்

சித்திரை, ஆடி, ஐப்பசி, தை மாதப் பிறப்புக்களில் (வருஷத்தில் நான்கு முறை) அவசியம் தர்ப்பணம் செய்ய வேண்டும்.

ஒரே தினத்தில் மாஸ ஸங்க்ரமண தர்ப்பணமும் அமாவாஸ்யை தர்ப்பணமும் நேரிட்டால், அமாவாஸ்யை தர்ப்பணத்தைவிட்டு, மாஸ ஸங்க்ரமண தர்ப்பணத்தை மட்டும் செய்ய வேண்டும்.

மாஸ தர்ப்பணம், அமாவாஸ்யை தர்ப்பணம், பரேஹநி தர்ப்பணம் இம்மூன்றும் ஒரே தினத்தில்நேரிட்டால், மாஸ தர்ப்பணம், பரேஹநி தர்ப்பணம் இவ்விரண்டையும் செய்ய வேண்டும். மாஸதர்ப்பணம் சேராவிடில் பரேஹநி தர்ப்பணம் அமாவாஸை தர்ப்பணம் இவ்விரண்டையும் செய்ய வேண்டும்.

45 நாழிகைக்குள் மாஸ ஸங்க்ரமணமானால் அன்றைய தினமே தர்ப்பணம் செய்ய வேண்டும்.

45 நாழிகைக்கு மேல் மாஸ ஸங்க்ரமணமானால் மறுநாள் தர்ப்பணம் செய்ய வேண்டும்.

தக்ஷிணாயன புண்ய காலத்தில் ஆடிமாதம் பிறப்பதற்கு முன்பே 20 நாழிகைக்குள் (உத்தராயணத்திலேயே) தர்ப்பணம் செய்ய வேண்டும்.

உத்தராயண புண்ய காலத்தில் தைமாதப் பிறப்பு ஆனபின், 20 நாழிகைக்குள் (உத்தராயணத்திலேயே) தர்ப்பணம் செய்ய வேண்டும். இரவில் ஆடிமாதப் பிறப்பானால், அன்று பகலிலும், தைமாதப் பிறப்பானால் மறுநாள் பகலிலும் தர்ப்பணம் செய்யவும்.

ஸங்கல்பத்தில் "மேஷஸங்க்ரமண ஸ்ராத்தம்" "கடக ஸங்க்ரமணஸ்ராத்தம்" என்று அந்தந்த மாதப் பிறப்பைச் சொல்லி, "திலதர்ப்பண ரூபேண அத்ய கரிஷ்யே" என்று அந்தந்த மாதத்திற்குத் தக்கபடி சொல்லவேண்டும். மற்ற மந்த்ர தந்த்ரங்களெல்லாம் அமாவாஸ்யை தர்ப்பணத்தில் சொல்லியதுபோல் செய்யவும்.

RangaRakes



# க்ரஹண தர்ப்பணம்

ஸூரிய க்ரஹணத்தில் கிரஹணம் பிடிக்கத்தொடங்கிய போதும், சந்திர கிரஹணம் விட ஆரம்பித்த போதும் ஸ்நானம் செய்து க்ரஹண தர்ப்பணம்செய்ய வேண்டும்.

ஸூர்யக்ரஹணம் ராத்திரியில் ஆரம்பித்துவிட்டால், பிறகு பகல்ஏற்பட்டவுடனும், சந்திரகிரஹணம் பகலிலேயே ஆரம்பித்து, விடவும் ஆரம்பித்தால் பிறகு ராத்திரி வந்த பிறகும் தர்ப்பணம் செய்ய வேண்டும். விடியற்காலையில் சந்திரக்ரஹணம் ஏற்பட்டு, பகலில் விட ஆரம்பித்தால் சூரியோதயத்திற்கு முன்பே தர்ப்பணம் செய்ய வேண்டும்.

க்ரஹணங்கள் ஆரம்பிக்கும்போதே ஸ்நானம் செய்து காயத்ரீ முதலிய மந்திர ஜபம் செய்துக்கொண்டிருந்து தர்ப்பணகாலம் வரும்போது தர்ப்பணம்செய்யலாம்.

ஸூரியக்ரஹணத்தன்று செய்யும் தர்ப்பணத்தின் ஸங்கல்பத்தில்,

சந்த்ரோபராக ஸத்ருச' "ஸூர்யோபராக' ஸ்ராத்'தம் திலதர்ப்பண ரூபேண கரிஷ்யே" என்றும்

சந்திரக்ரஹணத்தன்று ஸங்கல்பத்தில்,

"ஸூர்யோபராக ஸத்ருச ஸோமோபராக' புண்யகாலே ஸோமோபராக' ஸ்ராத்த'ம் திலதர்ப்பண ரூபேண கரிஷ்யே" என்றும் சொல்ல வேண்டியது.

## கிரஹணத்தில் ஆகார நியமம்

### சூரிய க்ரஹணம்

ஆரம்பிப்பதற்கு முன் 4 யாமத்திற்கு (12 மணி காலத்திற்கு) முன்பே போஜனம் செய்ய வேண்டும். கிர

tamilnavarasam.com

ஹணம் விட்டதும் ஸ்நானம் செய்து போஜனம் செய்ய லாம். சூரியாஸ்தமனத்திற்குப் பிறகு மோக்ஷகாலமாயி ருந்தால் அன்றிரவு சாப்பிடாமல் மறுநாள் சூரியனைப் பார்த்த பிறகே போஜனம் செய்ய வேண்டும்.

**சந்திர க்ரஹணம்**

க்ரஹணம் ஆரம்பிப்பதற்கு 3 யாமம் (9 மணி காலத்திற்கு முன்பே) போஜனம் செய்யவும். விட்ட வுடன் ஸ்நானம் செய்து சாப்பிடலாம். நடுராத்திரி 1–30 மணிக்கு மேல் க்ரஹணம்விட்டால் சாப்பிடக்கூடாது. மற்றும் மோக்ஷம் பூர்த்தியாவதற்குள் சூரியோதயம்ஆகி விட்டால் அன்று இரவில் சந்திரனைப் பார்த்தபிறகே சாப்பிட வேண்டும்.

## பரேஹநி தர்ப்பணம்

தகப்பனர் அல்லது தாயாருக்குச் செய்யும் சிராத்த தினத்திற்கு அடுத்த நாள் செய்ய வேண்டிய தர்ப்பணத் திற்குப் பரேஹநி தர்ப்பணம் என்று பெயர்.

இந்தப் பரேஹநி தர்ப்பணத்தில் பித்ரு வர்க்கத் திற்கு மட்டும் தர்ப்பணம் செய்யவேண்டும். மாதாமஹ வர்க்கத்திற்குத் தர்ப்பணம் செய்ய வேண்டியதில்லை

---

# ஸாமவேதிகளின் பித்ரு தர்ப்பணம்

ஆசமநம், ப்ராணாயாமம், ஸங்கல்பம், இவைகளை யஜுர் வேதிகளைப்போல் செய்து,

### ப்ரோக்ஷணம்

அபஹதாஸுரா ரக்ஷாம்ஸி வேதி3ஷதே3ாயே ரூபாணி ப்ரதிமுஞ்சமாநா:—அஸுரா: ஸந்த: ஸ்வதயா சரந்தி— பராபரோ நிபுரோ யே ப4ரந்தி—அக்3நிஷ்ட2ாந் லோகாந் —ப்ரணுத3த் வஸ்மாத் ‖

அபவித்ர: பவித்ரோ வா ஸர்வாவஸ்த2ாம் க3தோபி வா ய:ஸ்மரேத் புண்ட3ரீகாக்ஷம் ஸ பா3ஹ்யாப்4யந்தர:ஶுசி: ‖



என்று சொல்லி பூமியை ஜலத்தால் ப்ரோக்ஷணம் செய்ய வேண்டியது.

பிறகு தெற்கு நுனியாக இரண்டு வரிசைகளாக தர்ப்பங்களை வைத்து கீழ்வரிசையில் இருக்கும் தர்ப்பங் களின் மீது ஒரு புக்னத்தை வைத்து,

### ஆவாஹநம்

''ஏத பிதரஸ்ஸோம்யாஸோ க3ம்பீ4ரேபி4 : பதி2பி4: பூர்வணேபி :—தத்தாஸ்மப்4யம் த்3ரவிணேஹ ப4த்2ரம் ரயிஞ்ச நஸ் ஸர்வவீரம் நியச்ச2த —உஶந்தஸ்த்வா ஹவாமஹே உஶந்தஸ் ஸமிதீ4மஹி உஶந்து ஸத ஆவஹ பித்ரூந் ஹவிஷே அத்தவே |

.......கோ'த்ராந்......ஶர்மண: வஸுருத்'ராதி' த்ய ஸ்வரூபாந் அஸ்மத்பித்ரு பிதாமஹ ப்ரபிதாமஹாந், அஸ்மத் மாத்ரு பிதாமஹி ப்ரபிதாமஹீஶ்ச ஆவா ஹயாமி |

என்று சொல்லி எள்ளைத் தெளித்து ஆவாஹநம் செய்ய வேண்டியது.

### ஆஸநம்

ஆயந்து ந: பிதரஸ்ஸோம்யாஸ:—அக்3நிஷ்வாத்தா: பதி2பி4ர் தே3வயாநை: அஸ்மிந் யஜ்ஞே—ஸ்வத4யா மத3ந்து—அதிப்3ருவந்து—தே அவந்த்வஸ்மாந்''

........கோ'த்ராணும்.....ஶர்மணும் வஸுருத்'ராதி' த்ய ஸ்வரூபாணும் அஸ்மத் பித்ருபிதாமஹ ப்ரபிதா மஹாநாம், அஸ்மத் மாத்ரு பிதாமஹி ப்ரபிதாமஹீ நாம்ச இத3மாஸ நம்.''

என்று மற்றொரு புக்னத்தை தெற்கு நுனியாக ஆஸநமாகப் போட்டு ''இத3ம் அர்ச்சநம்'' என்று எள்ளைச் சேர்க்க வேண்டும்.

பிறகு கீழ்க்கண்ட மந்திரத்தைச் சொல்லி எள்ளும் ஜலமும் வலது கைக் கட்டைவிரல் வழியாக அப்ரதக்ஷிண மாக புக்னத்தின் மீது விட வேண்டியது.

ஊர்ஜம்வஹந்தீ:—அம்ருதம் க்⁴ருதம் பய: கீலாலம்—
பரிஸ்ருதம் ஸ்வதா²ஸ்த² தர்ப்பயத மே பித்ரூந் ||

பிறகு மேற்குப் பக்கம் இருக்கும் தர்ப்பங்கள்மீது ஒரு புக்னத்தைச் சேர்த்து,

## மாதாமஹவர்க்க ஆவாஹநம்

ஏத மாது: பிதர:+பித்ரு ஹவிஷே அத்தவே

........கோ'த்ராந்......ஶர்மண: வஸுருத்'ராதி'த்ய ஸ்வரூபாந் ஸபத்நீகாந் அஸ்மந் மாதாமஹ—மாது: பிதாமஹ மாது: ப்ரபிதாமஹாந் ஆவாஹயாமி' என்று எள்ளைச் சேர்த்து,

ஆயந்து ந: பிதர:+தே அவந்த்வஸ்மாந்

என்று சொல்லி ஒரு புக்னத்தைச் சேர்த்து இத'ம் அர்ச்சநம்'' என்று எள்ளைச் சேர்க்கவும். பிறகு ''ஊர்ஜம் வஹந்தீ:'' என்பதால் எள் ஜலம் அப்ரதக்ஷிணமாக புக்னத்தின் மீது விடவேண்டும்.

## தர்ப்பணம்

ஸாமவேதிகளுக்குப் பித்ருதர்ப்பண மந்த்ரமில்லை. கோத்ரசர்மாக்களை மட்டும் சொல்லி தர்ப்பணம் செய்யவும்.

........கோத்ராந்.....ஶர்மண:......வஸுரூபாந் அஸ்மத் பித்ரூந் ஸ்வத'ாநமஸ் தர்ப்பயாமி |

இம்மாதிரியே எல்லா பித்ருக்களுக்கும் தர்ப்பணம் செய்ய வேண்டும்.

பிறகு, ''ஊர்ஜம் வஹந்தீ:+பித்ரூந்'' என்ற மந்திரத்தைச் சொல்லி, இரண்டு புக்னங்கள் மீதும் செலுத்தி அப்ரதக்ஷிணமாகச் சுற்றி, உபவீதம்செய்து கொண்டு,

''கயா நஶ்சித்ர ஆபு'வத்—ஊதீ ஸதா வ்ருத்'த'ஸ் ஸகா²'' என்று தொடங்கும் ஸாமாவைச் சொல்லி, பிரதக்ஷிண நமஸ்காரங்களைச் செய்யவேண்டும்.

RangaRakes



## உத்வாஸநம்

பிறகு உத்வாஸநம் முதலியவைகளை யஜுர்வேதிகளைப் போல் செய்யவும்.

முற்றிற்று

---

அயநம் முதலியவற்றின்

# ஸம்ஸ்க்ருதப் பெயர்கள்

தமிழ்ப் பெயர்களுக்குப் பதிலாக ஸங்கல்பத்தில் சொல்ல வேண்டிய ஸம்ஸ்க்ருதப் பெயர்கள்:

### அயனங்கள் 2

ஆடி முதல் மார்கழி வரையில் தக்ஷிணாயனம்.
தை முதல் ஆனி வரையில் உத்தராயணம்.

### ருதுக்கள் 6

| | |
|---|---|
| சித்திரை—வைகாசி | ...வஸந்தருது |
| ஆனி—ஆடி | ...க்ரீஷ்மருது |
| ஆவணி—புரட்டாசி | ...வர்ஷருது |
| ஐப்பசி—கார்த்திகை | ...சரத்ருது |
| மார்கழி—தை | ...ஹேமந்தருது |
| மாசி—பங்குனி | ...சிசிரருது |

### மாதங்கள் 12

| | |
|---|---|
| *சித்திரை—மேஷ | ஐப்பசி—துலா |
| வைகாசி—வ்ருஷப | கார்த்திகை—வ்ருச்சிக |
| ஆனி—மிதுன | மார்கழி—தநுர் |
| ஆடி—கர்கட | தை—மகர |
| ஆவணி—ஸிம்ஹ | மாசி—கும்ப |
| புரட்டாசி—கன்யா | பங்குனி—மீன |

*மேஷமாஸே, வ்ருஷபமாஸே என்ற வகையில் சொல்லிக் கொள்ளவும்.

tamilnavarasam.com

**வாரங்கள் 7**

ஞாயிற்றுக்கிழமை— பா4நுவாஸரம்
திங்கட்கிழமை— இந்து3வாஸரம்
செவ்வாய்க்கிழமை— பௌ4மவாஸரம்
புதன்கிழமை— ஸௌம்ய வாஸரம்
வியாழக்கிழமை— கு3ரு வாஸரம்
வெள்ளிக்கிழமை— ப்4ருகு3 வாஸரம்
சனிக்கிழமை— ஸ்தி2ர வாஸரம்

**நக்ஷத்திரங்கள் 27**

| | |
|---|---|
| அசுவினி— அஸ்விநீ | சுவாதி— ஸ்வாதீ |
| பரணி— அபப4ரணி | விசாகம்— விசாகா |
| கிருத்திகை— க்ருத்திகா | அனுஷம்— அநூராதா |
| ரோகிணி— ரோஹிணீ | கேட்டை— ஜ்யேஷ்டா2 |
| மிருகசிரம்— ம்ருகசீர்ஷ | மூலம்— மூலா |
| திருவாதிரை— ஆர்த்ரா | பூராடம்— பூர்வாஷாடா |
| புர்னப்பூசம்— புனர்வஸு | உத்திராடம்—உத்தராஷாடா |
| பூசம் —புஷ்யம் | திருவோணம் – ச்ரவண |
| ஆயில்யம் – ஆச்லேஷா | அவிட்டம் – ச்ரவிஷ்டா |
| மகம் – மகா4 | சதயம் —சதபிஷக் |
| பூரம் —பூர்வப2ல்கு3நீ | பூரட்டாதி —பூர்வப்ரோஷ்ட2பதா3 |
| உத்தரம் – உத்தரப'ல்குநீ | உத்திரட்டாதி – உத்தர ப்ரோஷ்ட2பத3ா |
| ஹஸ்தம் – ஹஸ்த | ரேவதி – ரேவதீ |
| சித்திரை —சித்ரா | |

---



ஸ்ரீ:

# யஜ்ஞோபவீதம் தரித்துக்கொள்வது

---

கை கால்களை அலம்பி, இரண்டு முறை ஆசமநம் செய்து, பவித்ர பாணியாய் ப்ராணாயாமம் செய்து,

ஓம் || சுக்லாம்ப3ரத4ரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்பு4ஜம் |
ப்ரஸந்ந வத3நம் த்4யாயேத் ஸர்வ விக்4நோபசாந்தயே ||
யஸ்ய த்3விரத3 வக்த்ராத்3யா: பாரிஷத்3யா: பரச்சதம் |
விக்4நம் நிக்4நந்தி ஸததம் விஷ்வக்ஸேநம் தமாச்ரயே ||

ஸ்ரீ கோவிந்த கோவிந்த, கோவிந்த, அஸ்ய ஸ்ரீப'க வதோ மஹாபுருஷஸ்ய ஸ்ரீ விஷ்ணோராஜ்ஞயா ப்ரவர்த்த மாநஸ்ய, ஆத்'யப்'ரஹ்மண: த்3விதீயபரார்தே4, ஸ்ரீ ச்வேத வராஹகல்பே, வைவஸ்வத மந்வந்தரே, ப்ரதம பாதே', ஜம்பூ3த்2வீபே ப'ாரதவர்ஷே, ப'ரதக'ண்டே சகாப்3தே', மேரோ: த'க்ஷிணே பார்ச்வே, அஸ்மிந் வர்த்தமாநே, வ்யாவஹாரிகே, ப்ரப'வாதி' ஷஷ்டி ஸம்வத்ஸராணும் மத்'யே.....நாம ஸம்வத்ஸரே.... அயநே.....ருதௌ,....மாஸே....பக்ஷே...சுப4 திதௌ' ........வாஸரயுக்தாயாம்.........நக்ஷத்ர யுக்தாயாம், ஸ்ரீவிஷ்ணுயோக' ஸ்ரீவிஷ்ணுகரண, சுப'யோக3 சுப4 கரண ஏவங்குண விசேஷண விசிஷ்டாயாம் அஸ்யாம் சுப'திதௌ' ஸ்ரீப'க'வத'ாஜ்ஞ்யா ப4க'வத்கைங் கர்ய ரூபம் யஜ்ஞோபவீத த4ாரணம் கரிஷ்யே என்று ஸங்கல்பித்துக்கொண்டு, யஜ்ஞோபவீததார4ண மந்த்ரஸ்ய ப்'ரஹ்மாருஷி: த்ரிஷ்டுப்ச2ந்த':, த்ரயீ வித்'யா

RangaRakes
tamilnavarasam.com

தே³வதா, யஜ்ஞோபவீத தா³ரணே விநியோக: என்று அநுஸந்தித்து, குந்தி உட்கார்ந்துகொண்டு, வலது உள்ளங்கை ஆகாசத்தையும், இடது உள்ளங்கை பூமியைப் பார்க்கும்படியாயும், ப்ரம்மமுடி மேலே வலக்கை கட்டைவிரலைப் பார்த்துக்கொண்டிருக்கும்படியாயும் யஜ்ஞோபவீதத்தை வைத்துக்கொண்டு,

யஜ்ஞோபவீதம் பரமம் பவித்ரம் ப்ரஜாபதே: யத்ஸஹஜம் புரஸ்தாத் |
ஆயுஷ்யம் அக்³ர்யம் ப்ரதிமுஞ்ச சுப்⁴ரம் யஜ்ஞோபவீதம் ப³லமஸ்து தேஜ: ||

என்று யஜ்ஞோபவீதத்தைத் தரிக்கவேண்டும். க்ருஹஸ்தர்கள் மறுபடியும் ப்ராணாயாமம் செய்து,

'பூர்வோக்த ஏவம்கு³ண விசேஷண விசிஷ்டாயாம் அஸ்யாம்...சுப⁴திதௌ² க்³ருஹஸ்தா³ஶ்ரம ஸித்த்யர்த்தம் தி³வ்ய யஜ்ஞோபவீதத⁴ாரணம் கரிஷ்யே' என்று ஸங்கல்பித்துக்கொண்டு மேலே கூறிய ப்ரகாரம் 'யஜ்ஞோவீததாரண மந்த்ரஸ்ய' என்று ஆரம்பித்து 'பலமஸ்து தேஜ:' என்று சொல்லி, இரண்டாவது யஜ்ஞோபவீதத்தைத் தரித்துக்கொள்ளவும். பிறகு ஆசமநம் செய்து,

உபவீதம் ச்சிந்நதந்தும் ஜீர்ணம் கச்மலதூஷிதம் |
விஸ்ருஜாமி ஹரே ப்³ரஹ்மந் வர்சோ தீ³ர்கா⁴யுரஸ்து மே ||

என்று சொல்லி, பழைய யஜ்ஞோபவீதத்தைக் கழற்றிவிட்டு ஆசமநம் செய்யவேண்டும்.

RangaRakes tamilnavarasam.com